1402
3.2.07

<u>சுருக்கம்</u>

நிலம் — மதுரை மாவட்டம் — மதுரை தெற்கு வட்டம் வடபழஞ்சி கிராமம் புல எண்.74ஏ மற்றும் சிலவற்றில் 80.97,0 எக்டேர் நிலத்தை தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வருவாய்த் (நி.மு.) துறை</u>

அரசு (நிலை) ஆணை எண். 100 நாள்.27.2.2007

படிக்க :

1. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித எண்.61009/ஓய்2/2006, நாள் : 30.11.2006.
2. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடித எண். பி2/37380/2006 நாள்: 13.[illegible].2006.

---

<u>ஆணை :</u>

மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம் வடபழஞ்சி கிராமம் புல எண். 74ஏ மற்றும் சிலவற்றில் 80.97.0 எக்டேர் (200 ஏக்கர்) நிலத்தினை தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க "எல்காட்" (ELCOT) நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கீழ்க்கண்டவாறு அறிக்கை அனுப்பி உள்ளார் :

(i) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், வடபழஞ்சி கிராமத்தில், புல எண். 74ஏ முதலியவற்றில், கீழ்க்கண்ட நிலங்கள் தகவல் தொழில்நுட்பப் பூங்கா வளாகம் அமைப்பதற்கு, தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு 83.05.0 ஹெக்டேர் வழங்கிட கோரிக்கை வரப்பெற்றது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு :—

| வ. எண். | கிராமம் | புல எண். | மொத்த விஸ்தீரணம் | தேவைப்படும் விஸ்தீரணம் | வகைப்பாடு. |
|---|---|---|---|---|---|
| 1 | வடபழஞ்சி | 74/A | 4.85.0 | | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் |
| 2 | | 74/B1 | 0.26/5 | | |
| 3 | | 74/B2 | 0.03.5 | | |
| 4 | | 74/B3 | 0.51.0 | | |
| 5 | | 75/1 | 0.01.5 | | |
| 6 | | 75/2A | 0.33.0 | | |
| 7 | | 76/A | 0.43.5 | | |
| 8 | | 76/B1A1 | 0.65.0 | | |
| 9 | | 76/B4 | 1.51.0 | | |
| 10 | | 77/1A | 0.01.0 | | |
| 11 | | 77/1B | 0.03.0 | | |
| 12 | | 77/1C | 0.60.0 | | |
| 13 | | 77/2 | 1.03.0 | | |
| 14 | | 77/4 | 1.37.0 | | |
| 15 | | 78 | 3.66.0 | | |
| 16 | | 79/1 | 3.57.0 | | |

/த.பி.பா.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | | 80/1 | 0.54.0 | | |
| 18 | | 80/2 | 1.68.0 | | |
| 19 | | 80/4 | 1.20.0 | | |
| 20 | | 81/1 | 0.82.5 | | |
| 21 | | 81/2 | 0.92.5 | | |
| 22 | | 82/1 | 1.50.0 | | |
| 23 | | 82/5 | 0.88.0 | | |
| 24 | | 83/1 | 2.32.0 | | |
| 25 | | 84/1 | 0.08.0 | | |
| 26 | | 84/1 | 5.25.5 | | |
| 27 | | 84/4 | 3.34.5 | | |
| 28 | | 85 | 3.41.0 | | |
| 29 | | 86 | 2.04.5 | | |
| 30 | | 87/1 | 0.16.0 | | |
| 31 | | 87/2 | 2.34.5 | | |
| 32 | | 87/4 | 0.01.5 | | |
| 33 | | 88/1 | 1.97.5 | | |
| 34 | | 88/3 | 4.09.5 | | |
| 35 | | 89 | 0.21.0 | | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் |
| 36 | | 90/1 | 2.23.5 | | |
| 37 | | 90/3 | 2.51.0 | | |
| 38 | | 91/1 | 0.72.0 | | |
| 39 | | 91/2 | [illegible].61.0 | | |
| 40 | | 91/3 | 0 35.5 | | |
| 41 | | 92/1 | 0.84.5 | | |
| 42 | | 92/2A | 1.43.5 | | |
| 43 | | 92/2B | 1.43.5 | | |
| 44 | | 92/3 | 0.26.0 | | |
| 45 | | 101/1 | 1.34.0 | | |
| 46 | | 101/2 | 1.44.0 | | |
| 47 | | 101/3 | 0.26.0 | | |
| 48 | | 104 | 4.44.5 | | |
| 49 | | 105 | 3.30.0 | | |
| 50 | | 106 | 4.21.5 | | |
| 51 | | 107 | 2.59.0 | | |
| 52 | | 108/1 | 3.31.0 | | |
| 53 | | 108/2 | 0.22.0 | | |
| 54 | | 108/8 | 0.48.5 | | |
| 55 | | 109/1 | 1.39.5 | | |
| | | மொத்தம் | 88.05.0 | | |

மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பொறுப்பில் இருந்து 200 ஏக்கர் நிலம் மட்டும் தொழி
நுட்பப் பூங்கா அமைக்க வழங்குவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தொழில்நுட்ப
பூங்கா அமைக்க உத்தேசித்துள்ள இடம் மதுரை தெற்கு வட்டம், திருப்பரங்குன்றம் உள்வட்ட
வடபழஞ்சி கிராமம், புல எண். 74ஏ மற்றும் பல புலங்களில் மொத்த விஸ்தீரணம் 91.05
ஆகும். அதில் கீழ்க்காணும் புலங்களில் 80.97.0 ஹெக்டேர் மட்டும் "எல்காட்" நிறுவனத்திற்கு
வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது :

/த.பி

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 45 புல எண்களில் உள்ள 80.97.0 ஹெக்டேர் விஸ்தீரண உள்ள நிலம் அரசு புறம்புகல் 'மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்', என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. பல்கலைக்கழகத்தினர் நில ஆர்ஜிதம் மூலம் இந்நிலங்களைப் பெற்றுள்ளார்கள். எல்காட் நிறுவன கோரிக்கை நமூனாவில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்கள் 74B/1, 75/1, 77/1B அ.பதிவேட்டில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் என தாக்கலாகியுள்ளது. ஆனால், ஸ்தலத்தில் இவை இரயில்வே பயன்பாட்டிற்குரிய "B-Class" நிலங்கள் எனக் காணப்படுகிறது. எல்காட் நிறுவனக் கோரிக்கை விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ள இந்த நிலங்கள், தற்போது எல்காட் நிறுவனத்திற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 45 புலங்களில் விலைஉயர்ந்த மரங்களோ, புராதனச் சின்னங்களோ, வழிபாட்டுத்தலங்களோ இல்லை. இவை அனைத்தும் தரிசாகவும், செம்மண் பரப்பாகக் காணப்படுகிறது. பிரஸ்தாப இடம் மதுரை—தேனி தேசிய நெடுஞ்சாலை தென்புறம் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ளது. பிரஸ்தாப இடத்தின் அருகில், மதுரை—போடிநாயக்கனூர் இருப்புப்பாதை செல்கிறது. இப்பகுதி பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து 13 கி.மீ.தூரத்திலும், பெருங்குடி விமான நிலையத்திலிருந்து 23 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள புலங்களின் இடையிடையில் கீழ்க்குறிப்பிட்டுள்ள புலங்கள், பாறை மற்றும் ஓடைப் புறம்புகல் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. :—

| புல எண். | விஸ்தீரணம் ஹேக்டேர் | பாகுபாடு |
|---|---|---|
| 93 | 2.26.5 | அரசு புறம்புகல் பாறை |
| 109/11 | 0.03.0 | |
| 79/2 | 0.05.5 | அரசு புறம்புகல் ஓடை |
| 80/3 | 0.14.0 | |
| 82/4 | 0.09.0 | |
| 83/4 | 0.05.0 | |
| 84/3 | 0.14.0 | |
| 88/2 | 0.14.0 | |
| 108/7 | 0.41.5 | |
| | 3.32.5 | |

மேலே சொன்ன 3.32.5 எக்டேர் நிலம் தவிர்த்து மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஒப்புதல் அளித்துள்ள 80.97.0 எக்டேர் நிலம் (200 ஏக்கர் மட்டும்) நிலமாற்றம் செய்யப்படவுள்ளது. பிரஸ்தாப புலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம் செய்ய வட்டாட்சியரால் பிரஸ்தாப புலங்களின் 1.6 கிலோ மீட்டர் சுற்றளவில் 2006ஆம் ஆண்டு நிகழ்ந்துள்ள 1 விற்பனைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் வ.எண்.16ல் கண்ட விற்பனைப்புள்ளியில் பத்திர எண்.508, நாள். 06.03.2006இன்படி புல எண்.214—7இல் 9,480 சதுரடி பரப்பு நிலம் ரூ.94,800/—க்கு விற்பனையாகியுள்ளது. மேற்கண்ட விற்பனைப்புள்ளி மதிப்பின்படி சென்ட் 1க்கு ரூ.4,360/— என்பதையே நிலமாற்றம் செய்யவுள்ள புலங்களுக்கு மதிப்பாக நிர்ணயம் செய்யலாம். பிற விற்பனைகள் வீட்டுடன் கூடிய மனையாகவும், சந்தை மதிப்பை விட குறைவாகவும் உள்ளதால் அவை, நிலமதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவு செய்யப்படவில்லை. அதன்படி மதுரை தெற்கு வட்டம், திருப்பரங்குன்றம் உள்வட்டம், வடபழஞ்சி கிராமத்தில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க எல்காட் நிறுவனத்திற்கு நிலமாற்ற செய்யவுள்ள 80.97.0 ஹெக்டேர் புலத்திற்கு விலைமதிப்பாக கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 1) | 1 சதுர அடி மதிப்பு | ரூ. | 10 |
| 2) | 1 சென்டின் மதிப்பு | ரூ. | 4,360 |
| 3) | 1 ஏக்கர் மதிப்பு | ரூ. | 4,36,000 |
| 4) | நில மாற்றம் செய்யவுள்ள 80.97.0 ஹெக்டேர் அதாவது 200 ஏக்கர் | ரூ. | 8,72,00,000 |

வடபழஞ்சி கிராமம்

| புல எண். | பரப்பு | பாகுபாடு. |
| --- | --- | --- |
| 74/A1 | 4.47.0 | |
| | | |
| 74/B2 | 0.03.5 | |
| 74/B3 | 0.51.0 | |
| 75/2A | 3.33.0 | |
| 76A/1 | 0.28.0 | |
| 76B/4 | 1.90.5 | |
| 77/5 | 0.60.5 | |
| 78 | 3.66.0 | |
| 79/1 | 3.57.0 | |
| 80/1 | 0.54.0 | |
| 80/2 | 1.68.0 | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் |
| 80/4 | 1.20.0 | |
| 81/1 | 0.82.5 | |
| 81/2 | 0.92.5 | |
| 82/5 | 0.88.0 | |
| 84/5 | 2.55.0 | |
| 85 | 3.34.5 | |
| 86 | 3.41.0 | |
| 87/1 | 2.04.5 | |
| 87/2 | 0.16.0 | |
| 87/4 | 2.34.5 | |
| 88/1 | 0.01.5 | |
| 88/3 | 1.97.5 | |
| 89 | 4,09,5. | |
| 90/1 | 0.21.0 | |
| 90/2 | 2.23.5 | |
| 90/3 | 2.51.0 | |
| 91/1 | 0.72.0 | |
| 91/2 | 2.61.0 | |
| 91/3 | 0.35.5 | |
| 92/1 | 0.84.5 | |
| 92/2A | 1.43.5 | |
| 92/2B | 1.43.5 | மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் |
| 92/3 | 0.26.0 | |
| 101/1 | 2.34.0 | |
| 101/2 | 1.44.0 | |
| 101/3 | 0.26.0 | |
| 104 | 4.44.5 | |
| 105 | 3.30.0 | |
| 106 | 4.21.5 | |
| 107 | 2.59.0 | |
| 108/1 | 3.31.0 | |
| 108/2 | 0.22.0 | |
| 108/8 | 0.48.5 | |
| 109/1 | 1.39.5 | |
| மொத்தம் | **80.97.0** | |

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையினை மேலனுப்புகையில், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார் :-

(i) பிரஸ்தாபப் புலங்களில் ஆக்கிரமிப்பு, எந்த சம்பந்தப்பட்ட சின்னங்கள், கட்டிடங்கள், மரங்கள், மின் கம்பங்கள், புதை வழிச் சின்னங்கள் ஏதுமில்லை. தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு நில உரிமை மாற்றம் செய்வதற்கு கிராமத்தில் 'அ' விளம்பரம் செய்யப்பட்டது. ஆட்சேபணை ஏதும் பெறப்படவில்லை ;

(ii) மேற்படி புலத்திற்கு நிலமதிப்பாக சென்ட் ஒன்றுக்கு ரூ.4,360/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மொத்த நிலமதிப்பாக (விஸ்தீரணம் 80.97.0 எக்டேர் (அ) 200 ஏக்கர் ) ரூபாய் 8,72,00,000/- (ரூபாய் எட்டு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சம்) என் நிர்ணயம் செய்யலாம் ; மற்றும்

(iii) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம் வடபழஞ்சி கிராமம் புல எண்.74-ஏ முதலியவற்றில் 80.97.0 எக்டேர் நிலத்தினை சென்ட் ஒன்றுக்கு ரூ.4360/- என நிர்ணயம் செய்து ஒரு மடங்கு சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு "எல்காட்" நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் என அரசுக்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

4. மேற்கண்ட சூழ்நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோர்களின் அறிக்கைகளை நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று அதனடிப்படையில் கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது. :-

(i) மதுரை மாவட்டம், மதுரை தெற்கு வட்டம், வடபழஞ்சி கிராமம் புல எண். 74ஏ மற்றும் சிலவற்றில் 80.97.0 எக்டேர் (200 ஏக்கர்) நிலத்தினை நிலஉரிமை மாற்றம் செய்யும் நாளில் நிலவும் ஒரு மடங்கு சந்தை மதிப்பினை வசூலித்துக் கொண்டு தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கும் பொருட்டு வருவாய் நிலை ஆணை எண்.24-இல் உள்ள வழக்கமான நிபந்தனைகளுடன் 'எல்காட்' நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யலாம் ;

(ii) நிலம் எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகிறதோ அதற்காக மட்டுமே நிலத்தை பயன்படுத்த வேண்டும் ;

(iii) பிரஸ்தாப நிலமோ அல்லது ஒரு பகுதியோ தேவையில்லையெனில் அதை வருவாய்த் துறைக்கு மீண்டும் ஒப்படைக்க வேண்டும் ;

(iv) மேற்படி நிலத்தினை தடையாணை புத்தகத்திலிருந்து நீக்கலாம் ;

(v) பிரஸ்தாபப் புலங்களுக்கு இடையே உள்ள புல எண். 79/2, 80/3, 82/4, 83/4, 84/3, 88/2 மற்றும் 108/7-இல் காணும் ஓடையின் போக்கிற்கு எந்தவித பாதகமும் ஏற்படுத்தக்கூடாது ;

(vi) நில எடுப்பு சம்பந்தமாக ஈட்டுத் தொகை வழங்குவது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால், ஈட்டுத் தொகை உயர்வாக அளிக்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தால் அதனை 'எல்காட்' நிறுவனமே செலுத்த வேண்டும்; மற்றும்

(vii) 9.10.2006 அன்று நடந்த மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆட்சிக் குழு கூட்ட முடிவுகளுக்கு உட்பட்டு தனியார் நிறுவனங்களிலிருந்து பெறப்படும் நில கிரயத் தொகையில் 50% பல்கலைக்கழக வளர்ச்சிக்காக பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

5. மேலே பத்தி 4-இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சிறப்பு ஆணையர் (ம) நில நிருவாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப.செல்வம்,
அரசுச் செயலாளர்

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிருவாக ஆணையர்,
சென்னை-5

/த.பி.பா.

மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாவட்டம், மதுரை--20
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை—5.
மேலாண்மை இயக்குநர், எல்காட் நிறுவனம்,
சென்னை—600035

நகல்:
செயலர், தகவல் தொழில்நுட்பவியல் துறை, சென்னை—9
செயலர், உயர்கல்வித் துறை, சென்னை—9
செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—9
செயலர், பொதுப் பணித் துறை, சென்னை—9
செயலர், நிதித் துறை, சென்னை—9
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை—9
அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9
பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9.
அமைச்சர் (வருவாய் மற்றும் சிறை) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9
பதிவாளர், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்,
பல்கலை நகர், மதுரை — 625 001
செயலர், வருவாய்த் துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை—9
இணைச் செயலர்(நி.மு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை—9
இருப்புக்கோப்பு / உதிரிக்கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

1.3.07

பிரிவு அலுவலர்